**20. அட்டமாசித்திஅருளிய கதை**



சிவபெருமான் திருக்கைலாய மலையிலே எழுந்தருளி யிருந்தார். அப்பொழுது இயக்கப்பெண்கள் அறுவர் அங்கு வந்து, "எங்களுக்கு அட்டமாசித்தியை உரைத் தருள வேண்டும்" என்றுவேண்டிக்கொண்டார்கள். இறைவன் அவ்வாறே இயம்பியருளினார். அவர்கள் அதனை முன்னையூழ்வினையினாலே உடனே மறந்து விட்டார்கள். இறைவன் அவர்களைப் பார்த்துச் சினங்கொண்டார். "நீங்கள்பட்டமங்கை யென்னும் பதியில் ஆலமரத்தடியில் கருங்கல்லாகக் கிடக்கக் கடவீர்கள்" என்று வசவுரைவழங்கியருளினார். பெண்கள் மனந்தளர்ந்து, "வசவுரைக்கு நீக்கம் (சாபவிமோசனம்) கூறியருளவேண்டும்" என்று சொல்லி வேண்டிக்கொண்டார்கள். "நீங்கள் கருங்கல்லாய்க் கிடவுங்கள். நாம் மதுரையில் இருந்து வந்து உங்க களுடைய சாபத்தைநீக்கியருளுவோம்" என்று திருவாய் மலர்ந்தருளினார். இயக்கிமார் அறுவரும் பட்டமங்கையில் கல்லாகக்கிடந்தார்கள். ஆயிரம் ஆண்டுகள் சென்றன.சோமசுந்தரக் கடவுள் ஆசிரிய வடிவங் கொண்டு எழுந்தருளிவந்தார். அக் கருங்கற்களின்மீது திருக்கண் பார்வையைச் செலுத்தியருளினார். இயக்கிமார்கள் கருங்கல்வடிவம் நீங்கி யெழுந்து இறைவனை வணங்கினார்கள். இறைவன் அவர்கட்கு அட்டமாசித்தியைஉரைத்தருளினார். “பட்ட மங்கையில் பாங்காயிருந்து அட்டமா சித்தி அருளிய அதுவும்.

[அடியவர்க்கருளுதல்] (திருவாசகம்)